ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

சாஸ்திர மொன்றையே பரலோகஸாதனமாகிய தர்மத்தில் முக்கியப் பிரமாணமாக நம்பியிருக்கிறவர்கள் தர்மம் நிலைப்பதற்குப் பாடுபடுவதைக் காட்டிலும் மற்றவர்களும் தர்மஸ்தாபனத்திற்காக வென்று சொல்லிக் கொண்டு அதிகப்பாடுபடுகிறார்கள். ஆனால் அவர்கள் சாஸ்திரத்தை நம்புவதேயில்லை. ஆகவே தர்மஸ்வரூபத்தில் சாஸ்திரத்தை நம்பினவர்களுக்கும், நம்பாதவர்களுக்கும் ஒற்றுமையிருக்காது. சாஸ்திரப்பிராமாண்யவாதிகள் சாஸ்திரத்தில் கூறியிருப்பது தர்மமென்று சொல்வார்கள். மற்றவர்களோ தற்காலம் தங்களுக்கு ஹிதமாகத்தோன்றுவதே தர்மமென்பார்கள். அதற்கு சாஸ்திரம் அனுகூலமாயிருந்தால் அதைப்பிரமாணமென்பார்கள். அனுகூலமாயில்லாவிடில் அனுகூலமாயிருப்பதாகச்சொல்லி ஆர்யச் சிறுவரை ஏமாற்றுவதற்காக தாறுமாறாய்ப் பொருள்படுத்துவார்கள். சிலர் அதுபிரமாணமேயல்லவென்று துணிந்துசொல்லிவிடுவார்கள். மற்றுஞ்சிலர் சாஸ்திரசுவடியென்று ஒன்று இருக்கக்கொண்டுதானே வைதிகர் தமக்கு ஒத்துவரவில்லை, அதனால் அந்தச்சுவடிகளையே கொளுத்திவிடவேணுமென்று துணிந்துசொல்லிவிடுவார்கள். அப்படியிருக்கையில் இவர்கள் ஒப்புக்கொள்ளுவதையே தர்மமாக எல்லோருமங்கீகரிக்கவேண்டுமென்று நிர்ப்பந்தம்செய்வது பெரியதோர் ஸாஹஸமாகும். சாஸ்திரத்திற்கூறியதை நம்புவதற் கிஷ்டப்படாதவர்கள் ஸ்வகோஷ்டியில் தங்களுக்குத்தோன்றியதையெல்லாம் தர்மமென்ற எண்ணத்தினாலாவது, வேறு எவ்வித எண்ணத்தினாலாவது கட்டுப்பாடாயிருந்து அனுஷ்டிக்கமுயல்வது உசிதமாயிருக்கும். சாஸ்திரநம்பிக்கையுள்ளவர்களையும் சாஸ்திரீயதர்மத்தில் பிரவேசிக்கவொட்டாமல் வேறுவழியில் பலாத்காரமாகப் பூரச்செய்வது தர்மதேவதைக்கு ஸஹிக்காதகார்யமாகும். "அரசன் அன்றுகொல்லுவான், தெய்வம் நின்றுகொல்லும்." என்றபடி ஆதிகாரிகபதவியில் அமர்ந்திருக்கும் தேவர்கள் அடியோடு தர்மலோபம்வருவதைப் பார்த்திருக்கமாட்டார்கள். இதைக்கேட்ட மற்றவர்கள் நகைப்பார்கள். அதன்பயன் தேவஹேளனம்செய்த அஸுரர்கட்கும், அரக்கர்கட்கும் காலக்கிரமத்தால் நேர்ந்தது போல் கண்டிப்பாய் நேர்ந்துவிடுமென்பதில் கிஞ்சிற்றேனும் ஸந்தேஹமில்லை. வேதவைதிக விரோதமாய் நடந்தவர் ஒருவராவது க்ஷேமத்தையடைந்ததாகப் பிரமாணக்கிரந்தங்கூறவில்லை. அதைநம்பியே வருவதெல்லாம்வரட்டுமென்று வைதிகருமிருக்கிறார்கள். தர்மதேவதையே சரணம்.

சுபம் !

பத்திராதிபர்.

ஆர்ய தர்மம்.

சுக்ல-௵ புரட்டாசி-மீ௴ ௨௫௳

வைதிகர் தீர்மானம்.

தர்மசம்சயத்தில் அதை நிர்ணயிக்கவேண்டிய பொறுப்பில் தர்மசாஸ்திரத்தில் கூறப்பட்ட லக்ஷணம்பொருந்திய பரிஷத்துக்கு அதிகாரமேயொழிய மற்றவருக்கில்லை. அப்படியிருக்கையில் மற்றவர் சேர்ந்து சம்சயமில்லாத விஷயத்தில் ஒரு முடிவு செய்து கொண்டுவிட்டால் அது தர்மநிர்ணயமாகாது. இதைத் தான் வைதிகர்கள் விவாஹவயது மசோதா சட்டமாவதற்கு முந்தியும் சொல்லிக்கொண்டிருந்தார்கள். சட்டசபையிலும் இதைத் தெரிவிக்கத்தான் சென்று தெரிவித்தார்கள். இதைக் கேளாமல் ராஜாங்கத்தார் ராஜ்யதந்திரத்திற்காக வேண்டி, மசோதாவைச் சட்டமாக்கிவிட்டால் வைதிகர்களுக்கு வந்த தோல்வி என்னவோ தெரியவில்லை. சட்டமாய்விட்ட சமயமான இப்பொழுதும் அப்படியே தான் வைதிகர் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இதற்காகப் பலர் வருந்துவதாகவும், சிலர் வைதிகர் தோல்விக்காகச் சந்தோஷப்படுவதாகவும், வேறு சிலர்— வைதிகர்கள் இப்பொழுது தான் விழித்துக்கொண்டார்கள் போலிருக்கிறது; முந்தி தூங்கினார்கள் போலும் என்று பச்சாத்தாபப்படுகிறதாகவும், என்றைக்கும் பொதுக்கார்யத்தில் வைதிகர் ஒத்துவரமாட்டார்களென்றிவ்வாறு பலவாறாக பல பத்திரிகைகளில் வைதிகர் மண்டையை உருட்டுகிறார்கள். ஒருவராயினும், பிராமாணிகராயுள்ளவர் கூறுவதை வைதிகர் நம்புவார்களேயன்றி ஆயிரக்கணக்காக மற்றவர் தீர்மானித்ததை மதாசார விஷயத்தில் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். வைதிகர்கள் தர்மமென்று அங்கீகரித்ததை அவைதிகர்கள் வாக்கினால் சொல்லிவிட்டால் அதை தர்மமென்று நினைப்பதில்லை. உதாரணமாக— அஹிம்ஸை சிறந்த தர்மமெனக் கொண்டாடப்பட்டிருப்பினும், ஜினமதஸ்தர்கள் அஹிம்ஸை பரம தர்மமென்று சொன்னால் அவர்களும் நமது ஸித்தாந்தத்தை ஒப்புக்கொண்டி-

ருக்கிறார்களேயென்று அதைத்தர்மமாக அங்கீகரிப்பதில்லை. அவர்கள் வாக்கிலிருந்து வந்ததுபற்றி அது தர்மமாகாது என்று கூறுவார்களென பூர்வமீமாம்ஸையில் ஒரு அதிகாணத்தில் கூறப்பட்டிருக்கின்றது. அப்படியிருக்கையில், பாலிகாவிவாஹத் தடை அதர்மமென்று நிச்சயித்துக்கொண்டிருக்கும் வைதிகர்கள் அவை நிகஅதார்மிகர்களால் சட்டமாக்க வருவிக்கப்பட்டு அதற்கிணங்க சட்டமாக்கிவிட்டதை தர்மமென்று நினைப்பார்களா? ஒருகாலுமில்லை. இதற்காக அவர் செய்துகொள்ளவேண்டியதைத் தர்மஸேதுவானபரமேசுவரன் தோற்றுவிப்பார். சுபம்.

பத்திராதிபர்.

சாரதாமசோதா சட்டமாகிவிட்டது.

(559-வது பக்கத்தொடர்ச்சி.)

இச்சமயம் அன்னிபெசன்ட் என்றோர் ஆங்கிலமாது நமக்கு குருவென்று சீமைக்கப்பலில் வந்திறங்கினள். அவளை ஸாஸ்வதியென்றும், கார்கீயென்றும், மைத்ரேயியென்றும், நம் பிர்ம்ம குலத்திலுதித்த ஆங்கிலம்படித்த பிரபுக்கள் தலைமேல் தூக்கிக் கொண்டாட ஆரம்பித்தனர். முன்காலத்தில் நம் தேசத்திலே பிறந்து சக்கிரவர்த்தியின் புதல்வராய்தோன்றிய புத்தர் நம் மதத்திற்கு விரோதமாய் ஓர் மதத்தை ஸ்தாபிக்க ஆரம்பித்ததும், நம் முன்னோர்கள் அவரை இந்தியாவைவிட்டு தூரத்தியதுபோல் நாம் இவ்வம்மையை அயர்லாந்துக்குப் போகும்படி ஓட்ட முன் வரவில்லை. அவ்வாறு நாம் நம் மதத்தை மறந்துவிட்டோம். பிறகு எங்கேயோ ஆர்யஸமாஜம் என்றும், பிரும்மஸமாஜம் என்றும், ஹிந்துமஹாஸபை என்றெல்லாம் தழைத்தோங்கிக் கூத்தாடுகின்றன. எல்லாவற்றிற்கும் நாம் நல்வாவு கூறி அழைக்கத் தலைப்பட்டோம். இனி இந்த நம் மதம் தனிமையாய் அழகற்று நிற்கிறதென்று சொல்லமுடியுமோ? முடியாது. அதுகொண்டே மதம் ஒன்றுமறியாத நம் ஸகோதரர்களான சீர்திருத்தக்காரர்கள் ராஜாங்கத்தில் பெயர்பெற்றவர்களாகி உலகப்பிரஸித்தம் பெற்று விளங்கிக்கொண்டு தினஸரிப் பத்திரிகைகளையும் தங்களுக்கனுகுணமாய் வைத்துக்கொண்டு தீண்டாமைமுதலியனவே லோகத்திற்கு க்ஷேமம் செய்யக்கூடியதென்று பிரசாம் செய்துகொண்டும்

அதற்கு எதிரிடையாய் எழுதுவதைப் பிரசுரிக்காமல் நிறுத்திக் கொண்டும் இவ்விதம் பலவாறு மதத்தையே துலைத்துவிட்டனர். இச்சமயம் பிரகிருத சட்டத்தைப் பாஸ் செய்யாமற் போனால் நாம் இன்னும் இவ்விதமே போய்க்கொண்டு நமக்கு இன்னும் என்ன கேடுகளை விளைவித்துக்கொள்வோமோ தெரியவில்லை. இனியும் இவ்வாறு தூங்கவேண்டாமென்று நம்மை எழுப்பிச் சற்று விழித்துவிட்டாவது பிறகு தூங்கட்டும் என்று நம் சர்வேச்வரன் இச்சட்டத்தைப் பாஸ் செய்யும்படி செய்தார் என்பேன். “பயக்ருத்” பயத்தைக்கொடுப்பவர் என்று ஸஹஸ்ரநாமத்தில் ஈசனுக்கு ஓர் பெயரிருக்கிறது ஆகவே இப்பயத்தைக் கொடுத்தார். இப்பயத்தை பயமென்று நினைத்து நடுங்கினால் அவர் நமக்கு பயநாசந: என்ற பெயரை வெளியாக்குவார். இதற்காக பக்தர்களின் தூக்கத்தைப்போக்க முன்வந்திருக்கும் பகவானின் கருணையையும் நம், பரமாசார்யர்களின் பரமகருணையையும் முன்னிட்டுக் கொண்டு நாம் இனி செய்யவேண்டிய வேலையை முன்னமேயே குறிப்பிட்டிருக்கிறபடி யாவரும் ஒற்றுமைப்பட்டு நடத்த முன்வரவேண்டும்.

1. முதலில் ஹிந்து மெயில் என்ற பத்திரிகைகள் போல் உலகசமாசாரங்களை வெளியிடக்கூடிய பத்திரிகை தினப்பிரதியாய் ஆங்கிலத்திலும் தேசபாஷையிலும் ஆரம்பிக்கவேண்டும். இதற்கு மூலதனமாய் நம் மடாதிபதிகளிடமிருந்து பிரார்த்திக்கவேண்டும். இவ்விதமே பத்திரிகையை நம்மவர்கள் வாங்கும்படி செய்யவேண்டும். அவ்வப்போது சீர்திருத்தக்காரர்களும், மற்றவர்களும் பிரசுரிப்பதற்கு வேதமதானுசாரமான பதிலை விரித்து ஆஸ்திகர்களது புத்தியைக் காப்பாற்றவேண்டும்

2. ஆங்கிலப்பள்ளிக்கூடங்களில் மதவிஷயமாய் 1-மணி நேரமாவது உபன்யஸிக்கும்படியும் அன்னவர்கட்கு வர்ணாச்ரம தர்மமுறை தெரியும்படியும் செய்யவேண்டும்.

3. சாஸ்திரப்பாடசாலைகளில் ஸம்ஸ்கிருதம் கற்கும் மாணவர்களுக்கு உபன்யாஸசக்தியை உண்டுபண்ணி ஆங்காங்கு போய் உபன்யஸிக்கும்படி செய்யவேண்டும்.

4. காங்கிரஸ்ஸின் தற்காலத்துப்போக்கைத்தெரியப்படுத்தி காங்கிரஸ்ஸில் ஒருவரையும் மெம்பராய்ச்சேராமல் தடுக்கவேண்டும்

இதுதான் கவர்ண்மெண்டாரவர்கள் நமக்குச் சொல்லாமல் சொல்லிக்கொடுத்த விஷயம்.

5. இப்போது காங்கிரஸ்ஸில் கேட்கும் ஸ்வயாராஜ்யத்தை நாம் விரும்பவில்லை என்று கவர்ண்மெண்டுக்குத் தெரியப்படுத்தி அவ்விதம் கொடுக்காமலிருக்கும்படி கேட்டுக்கொள்ளவேண்டும்.

இதற்காக நாம் சீமைக்குப்போய் அரசர் பெருமானிடமாவது இந்தியாமந்திரியினிடமாவது முறையிட வேண்டுமென்று நாம் யத்தனிக்கவேண்டாம். அதற்கு ஆகும் பணச்செலவைக் கொண்டு நாம் முற்கூறிய கார்யத்தில் நுழைந்தால் நம் காரியம் வெகு சுலபமாய்க் கைக்கூடுமென்பதில் ஆக்ஷேபமேயில்லை. கூடிய சீக்கிரம் பத்திரிகையை ஆரம்பித்து இவ்விதம் பிரசாரம் செய்யப் போகிறோமென்று தெரியப்படுத்தினால் போதும். தவிர தற்சமயம் வைஸ்ராய் சட்டசபையில் சட்டம் செய்தது இந்தியாமந்திரிக்காவது, சக்கிரவர்த்திக்காவது, தெரியாமற் செய்துவிட்டதாய் எண்ணவே வேண்டாம். இவ்விதம் சட்டமாக்கினால் இவ்விதம் வைதிக கோஷ்டியினர் கிளம்புவார்கள் என்று அவர்கள் தீர்க்கமாய் ஆலோசித்துத்தான் கவர்ன்மெண்டார் சட்டமாக்கினார்கள். ஆகவே அரசனும், ஈசனும், நினைத்துச் செய்திருக்கும் இச்சட்டத்தில் நமது வேலையை நாம் காண்பிக்காவிடில் நாம் இருந்தும் இல்லாதவர்கள்தான். உதாரணமாக இதொன்றை கவனிக்கலாம். இச்சட்டத்தைப் பாஸ் செய்யும்போது சாரதா அவர்கள் தன் மசோதாவுக்கு எதிர்ப்பு அதிகமே இல்லையென்றும் சென்னை மாகாணத்திலும் P. S. சிவஸாமி அய்யாவர்கள் போன்றவர்களும் அங்கு பிரஸித்திபெற்ற ஹிந்து பத்திரிகையில் பத்திராதிபர் அபிப்பிராயமும் இங்கு நேரில் ஷை பத்திராதிபர்கள் என் சார்பாய் ஒட்டுக்கொடுத்திருப்பதுமே போதுமென்று சொல்லியிருக்கிறார். இது நமக்குப்போதாதா? இச்சட்டம் அமுலுக்கு வருகிறதற்குள் நாம் வேலை செய்து முடிக்கலாம். இல்லாவிடில் கொஞ்சகாலம் அவர்கள் தண்டனைக்குட்படுவோம். எவ்விதத்திலும் நம் காரியத்தை முடித்துக்கொள்ள ஸர்வேசுவரன் துணை செய்வான். நம் பரமாசாரியாள் அனுக்கிரஹம் எற்படும். ஆஸ்திகர்களே! விழியுங்கள்! எழுந்திருங்கள்! நம் மதத்திற்காகப் பாடுபடுங்கள். எல்லாம் சுலபமாய் ஆகும். சுபம்!

—— M. N. சுப்பிரமணியசாஸ்திரி.

ராஜீய தந்திரங்கள்.

அரசியல் வாதிகளுக்கு ஓர் அறிவிப்பு.

நமது பாரதநாடு சுதந்திர அவா பெருகி நிற்கின்றது. மேல் நாட்டு நாகரீக உருபுகொண்ட ஆக்ஷிமுறை மாறுவதற்கான தருவாயிலே, சுயேச்சை இயக்கத்திற்குக்குறுக்கே நின்ற ஹிந்து முஸ்லீம் கலகம் அனேகமாக ஒழிந்திருக்கும்காலையிலே, தேசிய இயக்கம் ஒங்குவதற்கான தருவாயிலே, நாட்டினுள் காங்கிரஸ் கக்ஷியுடன் சேர்ந்து ஓட்டுக்கொடுப்பதாகிய வெகு நுட்பமான ராஜீயத் தந்திரத்திறமையாலே, சட்டசபை சுயாராஜ்பக்கக்ஷியினர் மயக்கப்பட்டு, மேலேயேறிய கலக சம்பவங்களின் ஸ்தானத்திலே காங்கிரஸ்ஸுக்கும், வைதிகருக்கும், ஓர் புதிய பிளவு நிலை நிறுத்தப் பட்டு விட்டது. அந்தோ ! காங்கிரஸ்காரர்காள் ! உண்மை நிலையறியாது சுயேச்சைக்கு விரோதமாக நடந்துகொள்ளலாமோ! ராஜீயதந்திரங்களின் எல்லையை அறிந்திருப்பீர்களானல் நாட்டினுள் புதிய பிளவுக்கு இடங்கொடுக்கலாமோ !

நாங்கள் ராஜீய சம்பந்தப்பட்டமட்டில் உங்களை ஆதரிக்கிறேம். ஆயினும் மண்டிபோடும் நிலைமையிலே மதவிஷயங்களில் பிரவேசியாது இருக்குமாறு உங்களை வேண்டத் தயாராகயில்லை. ஆனல் தேசிய விடுதலைக்காக உழைக்கும் எங்களது பிரதிநிதிகள் என்ற முறையிலே,மதத்தில் பிரவேசிக்காமலிருக்குமாறு கட்டளை இடுகிறேம். எச்சரிக்கை செய்கிறேம். சுயேச்சைப்பாட்டையில் செல்லுகிறவர்களாய் சுயேச்சைக்கே ஈமக்குழி தோண்டி விடாதீர்கள். ஜனங்களின் நம்பிக்கையை நிலை நாட்டுவதற்கான மார்க்கத்திலே, ஒற்றுமை ஒங்கிடச்செய்யும் ரீதியிலே, மதத்தில் அனுவசியமாக தலையிடாது நிலைமைக்கேற்றவாறு நடந்துகொள்ளுங்கள் !

எச்சரிக்கையைப்பொருட்படுத்தாது மதத்தில்தலையிடும்வகையிலே பிடிவாதம் காட்டுவீர்களானல், காங்காஸ் ஸ்தாபனம் முறிக்கப் பட்டுவிடும். புது முறையிலே மதத்தில் பிரவேசியாத தேசிய சுயேச்சை இயக்கம் ஆரம்பிக்கப்படும். எங்கும் காங்கிரஸ்காரர்கள் கண்டிக்கப்படுவார்கள். தேர்தல்களில் முறியடிக்கப்படுவார்கள். காங்கிரஸ் இயக்கம் நிலைகுலைந்து சிதைந்துபோம். மத

உணர்ச்சியின் வேகத்தை அறியாது நிற்கும் ராஜீயத் தலைவர்களின் பார்வைக்கு உண்மை நிலையை வெட்ட வெளிச்சமாக பிரகாசப்படுத்துகிறோம். நிலைமையறிந்து நேர்மை முறையிலே மதத்தின் உயர் லக்ஷியங்களை ராஜீய வாதிகள் தயங்காமல் காப்பாற்றுவார்களா? மதத்தில் பிரவேசியாதிருப்பதாக காங்கிரஸ்ஸின் கொள்கையை மாற்றுவார்களா? என ஓர் அரசியல் வாதி எழுதுகிறார்.

சட்டமாக்கப்பட்ட விவாஹவயது மசோதாவும் அரசாங்கத்தின் நிலைமையும்.

பாமானுள்கடையவன் போன்று வாக்குறுதியை ஓர்அரசாங்கம் மீறுமானால் ஜனங்களின் நம்பிக்கையை நாளிடையில் முற்றிலும் இழந்துவிடும். ராஜீய சம்பந்தமற்ற மதவிஷயத்தில் பிரவேசிப்பதன் மூலம் அரசாங்கம் அடையும் நன்மை யாது? ஜனங்களுடைய நன்மையை நாடி சட்டம் செய்யப்படுவதாக கூறுவார்களானால் வேண்டாத பிரிவினர்க்குச் சுயேச்சை அளிக்கலாம். வேண்டாத சட்டம் திணிக்கப்பட்டு, மிருகபலத்தால் அமுலுக்கு கொண்டுவரப்படுமானால் அதைக்காட்டிலும் அதிகவீர்யம்வாய்ந்த சகிப்புத் தன்மையாகிய தீவிர மதானுஷ்டான ரூபமான சட்ட மீறுதல் கைக்கொள்ளப்படும்.

காங்கிரஸ் எதிர்ப்புடன் மத எதிர்ப்பும் அரசாங்கத்திற்கு ஏற்படும். அவதார புருஷர்களுக்கிருப்பிடமானதும் பல தியாகிகளை உற்பத்தி செய்ததுமாகிய இத்தேசத்தின் பாரதப் புத்திரர்கள் நேர்மையான கொள்கைக்காக தங்கள் உடல், பொருள், ஆவிகளைத் தியாகம் செய்தே தீருவார்கள். அரசாங்கத்தார் நாட்டினுள் புதிய குழப்பத்தை உற்பத்தி செய்யவேண்டாம். மதத்தின் பலத்தைத் தெரிந்துகொள்ள ஆசைப்படுவார்களானால் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரட்டும். நிகழ்ச்சிகள் ஸத்யத்தை நிலைநாட்டும். உண்மை வெளிப்படும்! அரசாங்கமே அறிக, ஏற்றது செய்க! பாரதபுத்திரர்காள் எழுக, கடமையைச் செய்திட! என ஓர் மதாபிமானி அறிவிக்கிறார்.

விவாஹவயதுமசோதா சட்டமாக்கப்பட்டதால் உண்டான நன்மைகளும் தீமைகளும்.

ராஜீய எதிர்ப்புடன் இருந்த அரசாங்கம் மதஎதிர்ப்பையும் கொண்டுவிட்டது. ஆழம் தெரியாமல் அடக்குமுறைகளை மத விஷயங்களிலும் பிரயோகிக்கும் காலம் நெருங்கில் ஆப்கானிஸ்தானத்தின் கரும் மேகங்கள் நமது அரசாங்கத்தைச் சூழ்ந்து கொள்ளும். நாட்டில் அமைதி ஒழிந்து கலகம் நிறவ அரசாங்கத்தார் விரும்புகின்றனரா? அடாது அனுஷ்டிக்கப்படப்போகும் அடக்குமுறைகளின் பலன்கள் படாதுபடும் வருங்காலசம்பவங்களினுல் தெளிவுறுத்தப்படலாம்.

காங்கிரஸ் ஸ்தாபனம் அமைதியான முறையில் எளியவர்களுக்கு உதவிபுரிய சந்தர்ப்பம் படைத்திருக்க மதத்தை ஒழிப்பதன்மூலம் தான் கைதூக்கிவிடக்கூடும் என்னும் முறைதவறிய நெறியினுல் தனது செல்வாக்கை நாட்டில் இழந்துவருவதோடு இன்னும பல சமூகவகுப்புப்பிழைகளுக்கும் சச்சரவுகளுக்கும் விதை விதைத்துவருகிறது. சென்ற 10-வருஷகாலமாக மதத்தில் அதிகம் தலையிட்டதன்பயனுய் முன்னணியில் நிற்கவேண்டிய காங்கிரஸ் பின்னடையும் காலத்தை அடைந்துவிட்டது. காங்கிரஸுக்கு எதிராக ஓர் புதிய பலம் படைத்த அழிக்கக்கூடாத மத இயக்கம் திரண்டுவிட்டது. மதத்தில் தலையிட்டதின்மூலம் காங்கிரஸுக்கு எதிராகவும் நேருரிபோர்ட்டை அங்கீகரியாதிருப்பவர்களுமாகிய முஸ்லீம்களுடன் ஹிந்துக்களும் சேர்ந்துவிட்டனர். காங்கிரஸ் தேசத்தின் ஸரியான பிரதிநிதி ஸ்தாபனமல்லவென்பது வெட்டவெளிச்சமாக்கப்பட்டுவிட்டது. உண்மையில் தேசநன்மைக்கு காங்கிரஸ் உழைக்குமானுல் லாகூர் காங்கிரஸில் மதத்தில் தலையிடும் கொள்கையை அரசியல் வாதிகள் மாற்றுவார்களாக.

ஏதோ தெளிவாக சொல்லப்படக்கூடாத காரணங்களால் ஹிந்துமுஸ்லீம்களுள் நடந்துவந்த கலகங்கள் ஒருவாறு நீங்கப்பெற்று மதத்தில் தலையிட்ட அரசாங்கம் காங்கிரஸ் இவைகளுக்கு விரோதமாக அவர்களுள் ஒற்றுமை எற்பட்டுவிட்டது. அவ்வண்ணமே பிராமணர் பிராமணரல்லாதார் பிளவும் நீங்கப்பெற்றது. புனிதத்தன்மையைக் காப்பாற்றுவதற்காக எல்லா ஹிந்துக்களும்

ஒன்றுசேர்ந்துவிட்டனர். மதஉரிமை விஷயத்தில் முஸ்லீம்களும் ஹிந்துக்களுடன் சேர்ந்துவிட்டனர். பிறகு நடப்பன நாளிடையில் தெரியவரும் என ஓர் வழிப்போக்கன் வரைகின்றான்.

விவாஹவயதுமசோதாவும், நமது கடமையும்.

திருச்சியைச் சார்ந்த திருவானைக்கோவிலில் 29-9-1929 மாலை 6-மணிக்கு சங்கர் ஸம்ஸ்கிருத காலேஜ் பிரின்சிபால் விசுவநாதசாஸ்திரிகள் அக்கிராஸனத்தின் கீழ் ஓர் மஹாநாடு நடைபெற்றது. அச்சமயம் மதுரை எம். என். சுப்ரமண்யசாஸ்திரியாரால் சட்டசபையில் நிறைவேற்றப்பட்டுள்ள விவாஹவயது மசோதாவின் அநீதத்தன்மை விரிவாக எடுத்துக்காட்டப்பட்டது. அரசாங்கத்தார் தங்கள் வாக்குறுதியை மீறியதுமன்றி சாதகமாக வோட் கொடுத்ததையும் கவர்மெண்ட் சார்பாக ஹோம் மெம்பர் மதத்தில் தலையிட்டதையும் கண்டித்துப் பேசினார். சம்மதவயதுக் கமிட்டியால் பெரிய நகரங்களிலுள்ள சீர்திருத்தக்காரர்களுடைய அபிப்பிராயமே பெரும்பாலும் வாங்கப்பட்டிருப்பதாயும், ஹிந்து ஜனத்தொகையில் 100-க்கு 98-வீதமுள்ள கிராமவாசிகளாய ஸநாதனதார்மிகாளின் அபிப்பிராயம் நிராகரிக்கப்பட்டு விட்டதாயும் சொன்னார். நபரின் தனிப்பட்ட சுதந்தரத்தில் பிரவேசிக்கும் இம்மசோதா நாளிடையில் பிராமணால்லாதார் முதலிய எல்லாருடைய உரிமைகளையும் பாதிப்பதற்கு மூலகாரணமாக இருக்குமென்றும் பிரசாரத்தைவிட்டு சட்டத்தால் நிர்ப்பந்தித்தல் யாவராலும் ஆக்ஷேபிக்கத்தக்கதெனவும் எடுத்துரைத்தார்.

கீழ்க்கண்ட தீர்மானங்கள் செய்யப்பட்டன:—

1. ஓர் ஸ்திரீ எம்மதத்தைச்சார்ந்த புருஷனையும் மணக்கலாமென்னும் பாஸுவினுடைய மசோதா முன்பு நிராகரிக்கப்பட்டிருக்க, பிரகிருதம் விவாஹவயதுமசோதாவை ஆதரித்த கவர்ன்மெண்டார் மதத்தை அழிப்பதை நோக்கமாகக் கொண்டிருத்தலை உணர்த்துகின்றது.

2. மதத்திற்காகவல்லாது ராஜீயநோக்கத்துடன் தேர்ந்தெடுக்கப்பட்ட மோதிலால் நேரு முதலிய சுயராஜ்யக்கக்ஷியினர் தங்கள் அதிகாரத்தைமீறி மதத்தில் பிரவேசித்தமையால் சட்டி

சபையிலுள்ள சுயராஜ்யக்கக்ஷியினர் இதுமுதற்கொண்டு நமது பிரதிநிதிகளல்ல. மதத்தில் தலையிடும் பல கொள்கைகளுடன் காங்கிரஸ் இருப்பதால் அது 100-க்கு 98-வீதமுள்ள ஸனாதன தர்மிகளின் நம்பிக்கையை இழந்துவிட்டது. எனவே மதத்தைத் தொலைக்கும் காங்கிரஸின் கோரிக்கைகளில் நாங்கள் சம்பந்தப் படாது ஒதுங்கிநிற்கிறோம். ஆகையால் காங்கிரஸ் எங்களுடைய பிரதிநிதிஸ்தாபனமும் அல்ல.

3. இதுமுதல், சட்டசபை ஜில்லாபோர்டு முதலிய எலெக்‌ஷன்களில் மதத்தில் தலையிடும் காங்கிரஸ்காரர்களுக்கும் ஏனையோருக்கும், ஓட்டுக் கொடுக்கக் கூடாது.

4. அரசாங்கத்தாருடன் போராடுவதையும், சட்டத்தை மீறுவதையும், முக்கிய நோக்கமாகக் கொள்ளாமல், நாங்கள் சாஸ்திரப்படி எங்கள் கடமையைச் செய்யவேண்டிய முறையில் மீண்டும் வழக்கம்போல் மதக்கட்டளையை அனுஷ்டித்தே திருவோம்.

5. எவ்வாக்ஷி முறையிலும் மதத்தில் தலையிடுபவன அங்கிகரிக்கப்படமாட்டாது. 1930-ஜனவரி முதல்தேதி முதலும் மதக் கடமையைச் செய்வதன் மூலம் ஏற்படும் கஷ்டங்களை சந்தோஷத்துடன் ஏற்கத் தயாராக இருக்கிறோம்.

6. இந்தியாமந்திரி, இந்திய பார்லிமெண்ட் கமிட்டி இவர்களது கட்டளையின் பேரிலேயே கவர்மெண்ட் அங்கத்தினர்கள் மசோதாவை ஆதரித்திருப்பதால், மசோதாவை ஆக்ஷேபிக்கவும் ரத்து செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யவும், இங்கிலாந்துக்கு தூது அனுப்புவதை நாம் விரும்பவில்லை. இந்தியாவிலேயே சாத்தியமான வரை மசோதாவை ரத்துசெய்ய சட்டரீதியான காரியங்களைச்செய்வதனாலும், நமது மதத்தை வழக்கம்போல் அனுஷ்டித்து வருவதற்கான பிரசாரங்கள் செய்வதனாலும் மதக்கடமைகளை வழக்கம்போல் அனுஷ்டித்து வருவதன் மூலம் சட்டத்தை ரத்து செய்வதற்கான கிளர்ச்சியில் வேலை செய்துவருவதே சரியென அபிப்பிராயப்படுகிறோம்.

மதக்கொள்கைகளைப்பிரசாரம் செய்வதன்பொருட்டு தினசரி வர்த்தமானங்களுடன் ஓர் ஆங்கில தினசரியையும், தமிழ் தினசரியையும், ஆரம்பிக்க வேண்டுமென தீர்மானிக்கிறோம்.

இத்தீர்மானங்களுக்குப் பிறகு கவிரத்ன பஞ்சாபகேசசாஸ்திரிகளால் நமது மதக்கடமை வெகு அழகாக நிரூபிக்கப்பட்டது. கடைசியில் அகிலாண்டேசுவரி பிரஸாதம் வழங்கப்பட்டு அக்கிரஸனாது முடிவுரையுடன் கூட்டம் கலைவுற்றது என திருச்சியிலிருந்து ஸ்ரீமான் R. நடராஜன் அறிவிக்கிறார்.

மத்ரப்ராந்திய பிராமணஸபை.

விவாஹவயதுமசோதா நிறைவேறிவிட்டதால் இனி என்ன செய்வதென்பதை யோசிக்க பிரும்மஸ்ரீ டி. ஆர். வெங்கட்ராம அய்யர் அவர்கள் தலைமையில் 24-9-29 சாந்தாச்ரமத்தில் ஓர் பெருங்கூட்டம் கூடியது. பற்பல பண்டிதர்களும், மற்றவர்களும் வந்திருந்தனர். பிரும்மஸ்ரீ வே. ஸோமதேவசர்மாவால் பிரேரிக்கப்பட்டு எல். ராமச்சந்திரச்ரௌதி, தி. ராமனுததீக்ஷிதர் முதலியவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாகநிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்: —

1. அவஸரமாகவும், சாஸ்திரவிரோதமாகவும், மதாதிபர்களான ஸ்ரீ மடாதிபதிகளைக் கலக்காமலும், விவாஹவயதுமசோதாவைநிறைவேற்றியதால் இந்தஅக்ரம சட்டத்தைவிட தைவிக சட்டமான தர்மசாஸ்திரவிதிப்படி விவாஹம் செய்வதென்றும் லௌகிகசட்டத்தை மீறியதால் வரும் ஜெயில் முதலிய சிக்ஷையைப் பெறுவதெனவும், அப்படி தைர்யமாக வருபவர்களைச்சேர்த்து தக்க முயற்சிசெய்ய ஸ்ரீமான் வே. ஸோமதேவசர்மாவைக் காரியதரிசியாக நியமிக்கிறது.

2. விச்வாமித்திர கல்பத்தின்படி ஸ்ரீ காயத்ரீ மஹாமந்திரத்தை ஸஹஸ்ராவர்த்தி ஹவனதர்ப்பண பூஜாதிகளைச் செய்து நமது வைரிகளுக்கு நற்புத்தி உண்டாகும்படியும் இவ்வநாசாரவேத சட்டம் அழியும்படியும் நாளது நவராத்திரி ஆரம்பமுதல் 10-நாள் இதை விமரிசையாக செய்துமுடிக்க பிரும்மஸ்ரீ மண்டகுளத்தூர் கிருஷ்ணஸாமி அய்யாவர்களை நியமிக்கிறது.

3. சட்டவழியால் இதைத் தொலைக்க ஏதேனும் முயற்சிசெ செய்யவும், சட்டத்தை எதிர்த்து சிறைக்குச்செல்வோர் குடும்பத்

தைப் போஷிக்கவும், தக்க முயற்சிசெய்ய அட்வகேட் ஸ்ரீ. டி. ஆர் வெங்கட்டராமய்யர் அவர்களை நியமிக்கிறது.

அகிலபாரத ஸநாதன தர்ம மஹாஸபை.

சென்னைமாநகரில் ஷை மஹாஸபை அக்டோபர்மீ இரண்டாம் வாரத்தில் நடத்துவதாக ஏற்பாடுசெய்யப்பட்டிருக்கிறது. விவாஹவயது மசோதாவைத் தொலைக்கவே இச்சபை நடக்கிறது. இந்திய கவர்ன்மெண்டும், ஸ்வயராஜ்யக் கக்ஷியும் ஒன்று சேர்ந்து பிடிவாதமாக இதைப் பூர்த்திசெய்தனர். ராஜப்ரதிநிதி கையெழுத்துச் செய்யாமலிருப்பது ஓர் வழியுண்டு. அதற்குப்பண்டித மாளவ்யா கூறியபடி இந்த வயதில் விவாஹமானவர் இந்த வயது வயது வரை திருடாங்கமாயிருப்பதாக ஓர் உறுதிமொழிப் பத்திரம் இரண்டாயிரம் கையெழுத்துக்களுடன் அனுப்ப பாரம் அச்சிட்டு வருகிறோம்.

கவர்ன்மெண்டு காட்டியவழியில்தான் ராஜப்ரதிநிதி செல்வர். அதற்கடுத்தபடியாக பார்லிமெண்டில் (லண்டனில்) உள்ள இந்திய மந்திரியினிடம் தூது செல்வது இரண்டாவது காரியம். நீதிஸ்தலத்தின் மூலம் நியாயம் தேடுவது மூன்றாவது காரியம். இதுவும் பயன்படாவிடில் இம்மஹாநாடு காட்டும் வழியான சட்டத்தை மீறி, பன்னிரண்டு வயதிற்குள் விவாஹம் செய்து, சிறை சென்று நவநாகரிகப்பேய்க்கு நமது உயிரை பலியிடுதல் நான்காம் வேலை. மந்திரசக்தியினால் ஏதேனும் பயனுண்டா என பரீக்ஷித்துப் பார்ப்பது ஐந்தாம் முறை. புதிய சபைக்கு இந்த அவைதிகர்களை அனுப்பாமல் வைதிகமதாபிமானிகளைத் தேர்ந்தெடுத்தல் ஆறாம் முறை.

இச்சமயம் மும்முரமாகக் துணிந்து வேலை செய்யாவிடில் "விதவைகள் கட்டாயம் மணக்க வேண்டும்." "தாரமிழந்தவர் பதியிழந்தவளையேமணக்கவேண்டும்" "வேண்டாதபோது ஆணும் பெண்ணும் விவாஹரத்து செய்யவேண்டும்." என்பதுபோன்ற பல அநுசாரங்களை ஒன்றன்பின்னொன்றாய்கொண்டுவர பலர் காத்துக் கொண்டிருக்கின்றனர். ஸம்கிருதமசோதா முதற்படியென்

றும் அதனால் எவ்விதப்பயனை சீர்திருத்தக்காரர்கள் எதிர்பார்க்கின்றனரென்றும் வியக்தமாக தெரிந்து விட்டது. ஆதிமுதல் ஸ்ரீ ஜகத்குரு காமகோடிபீடாதிபதி ஸ்ரீ சங்கராச்சார்யஸ்வாமிகள் ஊர் ஊராகப் பிரசாரம் செய்யும்படி பண்டிதர்களை ஏராளமாக செலவு செய்து அனுப்பியபோது பலர் அக்கரைகொள்ளவில்லை. சென்றது செல்லட்டும். ஒருவர் நன்மைக்காக நடக்கும் காரியம் அல்லயிது. ஆதலால் ஒவ்வோர் அக்ரஹாரத்திலும் ஓர் பொதுக் கூட்டம் கூடி ஒவ்வொரு பிரதிநிதியை அனுப்பினாலும் போதும் நமது ஊக்கத்தைக் கூட்டத்தின் கணக்கே வெளியிடவல்லது. குறைந்தது இருபதாயிரம் போாவது கூடவேண்டும். ஆர்யதர்மம் சந்தாரர்கள் வரப்போகும்பெரும் அனர்த்தங்களை நன்குயோசித்து ஓர் கூட்டம் உடனே கூட்டி பிரதிநிதியை அனுப்பும்படி வேண்டுகிறேன். வங்கதேசத்திலிருந்து ஸ்ரீமான் ஸ்யாமசுந்தரசக்கிரவர்த்தி என்று பெரியார் அக்ராஸனம் வஹிக்க இசைந்திருக்கிறார். பிரதிவாதிபயங்கர ஸ்ரீ அநந்தாசார்ஸ்வாமிகளை இம்மஹாநாட்டை நேரில் வந்திருந்து ஆரம்பிக்கும்படி வேண்டிக் கொண்டிருக்கிறோம். இடம் தேதி முதலியவைகள் பின்னர் அறிவிக்கப்படும். இச் சமயத்தை இழக்கவேண்டாமென மறுமுறை வேண்டுகிறேன்.

ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவசர்மா,
அகில இந்திய ஸநாதன தர்மஸபை
உபகாரியதரிசி.

விவாஹமசோதா கண்டனம்.

ஸமீபத்தில் இந்தியசட்டசபைகளில் நிறைவேறிய சாரதாமசோதாவைக் கண்டிக்கவும், அதைப்பற்றிப் பேசுகையில் எமதுசாஸ்திரங்களை அவமதித்துக்கூறிய சட்டசபை அங்கத்தினர்களைக்கண்டிக்கவும், கும்பகோணம் ஸ்ரீ மாத்வஸபையின் ஆதரவில் 30-9-29 இரவு 7-மணிக்கு செட்டியாயர் மண்டபத்தில் துவைதவித்வான் ஸ்ரீமான்கூடாகுளம்பாபாசாரியார் அவர்களின் தலைமையில்ஓர் பிராமண மஹாநாடு கூடியது. பலத்த மழையாயிருந்தாலும் திரிமதஸ்தர்களும் நிரம்பியிருந்தனர். ஸ்ரீமான் கோபாதேசிகாசாரியார்இம் மசோவின்சரித்திரத்தையும், ஸ்ரீமான் நேருமுதலியவர்களின்சாஸ்

திரத் துரோஹத்தையும் விரிவாக எடுத்துரைத்தார். ஸ்ரீமான் ஜி. பூவராகாசாரியார் பாதகண்டம் வர்ணாசிரமிகளுக்குப் பிறப்பு இடமென்றும் அன்னிய நாட்டார்களே நமது ஆசாரங்களைச் சிலாஹித்துப் பல புஸ்தகங்களில் வெளியிட்டிருப்பதால் துரைத்தனத்தார் மத விஷயத்தில் தலையிட்டு ராஜவிசுவாஸிகளான பிரஜைகளைச் சட்ட மறுப்புச் செய்யும்படித் தங்களை ஜவாப்தாரியாக்கிக்கொண்டிருக்கின்றனர் எனவும் பேசினர். ஸ்ரீமான் ஸ. சா. வேங்கங்கடாரமய்யர் ஆசார விஷயங்களின் சட்டத்தை ஏற்படுத்தவே துரைத்தனத்தாரும், சட்டசபை அங்கத்தினர்களும் அர்ஹல்லர் எனவும், எந்த நோக்கங்களுடன் இம்மசோதா ஏற்படுத்தப்பட்டிருக்கிறதோ அவையாவும் இதனால் ஏற்படாவென்றும், சாஸ்திரோக்தமான பிரும்மசர்ய முறைப்படி நடந்தால் தான் ஸித்திக்குமென்றும், தமது வேதமாகிய பைபிளில் ஒரு எழுத்துகூட மாற்றப்படக் கூடாதெனப் பல வருஷங்கள் சண்டைபோடும் நமது துரைத்தனத்தார் நமது சாஸ்திரங்களைத் தலைகீழாக்கப் புகுந்தது விந்தையானதெனவும் பேசினர்.

ஸ்ரீமான் M. ராமராவ் தர்மாதர்மங்களை நிச்சயிக்க சாஸ்திரங்களையே கையாளவேண்டும் எனவும், கேவலம் யுக்திகளால் ஸாதிக்கப்புகுந்தால் அடைபட்டிருக்கும் ஒருவனை வெளியேற்றிவிடுவதால் புண்ணியமுண்டு என்ற யுக்தியைக்கொண்டு தேகத்தில் அடைபட்டிருக்கும் ஜீவனை வெளியேற்றிப் புண்ணியத்தைப் பெறவேண்டி சிரச்சேதம் செய்யவேண்டிவரும் என்றும், சாஸ்திரத்தில் கூறப்படும் விவாஹம் என்ற ஸம்ஸ்காரத்தால்தான் தீக்ஷிதர்கள், அர்ச்சகர்கள், முதலியோருக்கு ஆலயங்களில் பூஜாதிகாரம் உண்டாகிறதென்றும், இம்மசோதா சாஸ்திரீய விவாஹத்திற்கு விருத்தமாயிருப்பதால் நமது ஆசார அனுஷ்டானங்களும், ஆலயவழிபாடுகளும் சீர்குலைந்துவிடுமாதலால் இதை ஸாத்விக முறையில் மீறுவதற்கு முன் ஒவ்வோர் சுபாசுப காரியத்திலும் மடத்து மரியாதை செய்யும் நாம் மடாதிபதிகளின் அனுமதியைப் பெறவேண்டுமென்றும் பேசினர். ஸ்ரீமான் ஸௌந்திராஜய்யங்கார் மடாதிபதிகளை மாத்திரமல்ல, ஆசார்யபுருஷர்களையும் பிரார்த்தித்து அநுமதி பெறவேண்டுமென்றும் நமது ஜில்லாக்களின் பிரதிநிதியான ஸ்ரீமான் A. ரெங்கஸ்வாமி அய்யங்காரவர்கள் தமக்குச் சொந்த பந்துவாயிருந்தும் சாஸ்திரவிரோதமாய் நடந்து

மசோதாவை முதன்முதலில் ஆதரித்தது காலத்தின் கோலமே என்றும் பேசினர். முடிவில் அடியிற்கண்ட தீர்மானங்கள் ஏக மனதாய் நிறைவேற்றப்பட்டு கனம் இராஜப்பிரதிநிதியவர்களுக்கு தந்திமூலம் அறிவிக்கவேண்டும் என்றும் முடிவுசெய்யப்பட்டது. ஸ்ரீமான்கள் M. K. வைத்தியநாதய்யர், S. மகாலிங்கய்யர், G.V. வேங்கடராமய்யர் முதலியவர்களும் விஜயம்செய்திருந்தனர்.

தீர்மானம் 1. சாரதாமசோதா பிராம்மணர்களாகிய எங்களுக்கு மதாசாரங்களில் பெரிதும் மாறுதலை விளைவிக்கும்படியாய் இருப்பதாலும் அதன்படி அநுஷ்டிப்பது இம்மைமறுமைகளுக்கு தீமையையுண்டுபண்ணும் என்ற நிச்சயமான நம்பிக்கையிருப்பதாலும் இதற்கு கையொப்பம் போடாமலிருக்கும்படிக்கும் போடுவதாயிருந்தால் அதனின்றும் பிராம்மணர்களைவிலக்கிக்கையொப்பமிடும்படிக்கும் கனம் இராஜப்பிரதிநிதியவர்களை இம்மஹாநாடு பிரார்த்திக்கிறது.

தீர்மானம் 2. ஷை மசோதா பிராம்மணஸமூஹத்தின் ஆசார அனுஷ்டானங்களுக்குக் குறைவுபடுத்தக்கூடிய முறையில் இருப்பதால் எல்லா மடாதிபதிகளும் ஆசார்யபுருஷர்களும் தத்தம் சிஷ்யகோடிகள் இம்மசோதாவைச் சாத்வீகமுறையில் மீறி சாஸ்திர முறைப்படியே விவாஹம்செய்து அதனால் ஏற்படும் சிறைவாஸத்தை ஏற்றுக்கொள்வதால் தோஷமில்லையென்ற அநுமதியைத்தரும் ஸ்ரீமுகங்களைத் தத்தம் சிஷ்யகோடிகளுக்குத் தந்தருளும்படி இம்மகாநாடு வேண்டிக்கொள்கிறது.

தீர்மானம் 3. தஞ்சை திருச்சிஜில்லாக்களிலும் தேசத்தின் ஏனைய பாகங்களிலும் இம்மசோதாவிஷயமாய் ஏற்பட்ட பல ஆக்ஷேபணைகளையும் சற்றேனும் மதியாமல் மசோதாவை முதலில் ஆமோதித்த நமது பிரதிநிதியான ஸ்ரீமான் A. ரெங்கஸ்வாமி அய்யங்காரவர்களை இம்மகாநாடு வெகுவாய்க் கண்டித்து தம் சட்டசபை மெம்பர்பதவியை ராஜீநாமா செய்து தேவையானால் மறு எலக்ஷனைத் தேடும்படிக்கும் இம்மஹாநாடு அவரை வற்புறுத்துகிறது.

M. ராமராவ்.

பிருஹதீச்சுவரமான்மியம் என்னும்

சோழமன்னர்களின் சரித்திரம்.

(542-வது பக்கத்தொடர்ச்சி.)

23 அத்தியாயம்.

ஸூதர்:—

ஸ்கந்தர்:— ஏ அரசே! உன் கைங்கர்யத்தாலுந் துதியாலும் மிக்க ஆனந்தமடைந்தேன். உன் மனையாளனுஷ்டித்த விருதத்தின் பயனாக உனக்கு ஜயசோழன் என்னும் ஓர் மகனுதிப்பான். அவன் எங்குஞ் சத்துருக்களிடையிற் ஜெயமே பெறுவான். இவ்வாறு ஷஷ்டியன்று இக்கிணற்றில் மூழ்கியும் என்னைத் தோத்திரஞ்செய்தும் என்னிடம் பக்திபாராட்டும் மலடியும் மக்கட்பெறுவாளென்பதிற் சந்தேகமில்லை. இவ்வாறு இங்கு வசிப்பவர்களுக்கு வரமளித்தேன். இந்த க்ஷேத்திரத்திலுள்ள சக்திகள் விஷ்ணு, கணேசர், அய்யனார் முதலியவர்களினாலயங்களை நிர்மாணஞ்செய். இவ்வாலயங்களை இங்கு செய்வதினால் உனக்கு மிகுந்த பயனுண்டாம்.

இவ்வாறு கூறி முருகன் மறையவே அவாணையின்படி மன்னன் திக்குகளில் நவசக்தி ஆலயங்களையும், மாரியினாலயத்தையும் ரேணுகாதேவிக்குப் பட்டணத்தின் நடுவிலோராலயத்தையும் தென்றிசையில் கணேசரின் கோயிலையும் மேற்றிசையில் அய்யனாரின் கோயிலையும் வடக்கில் நரசிம்மர், நீலமேகர் இருவருக்கும் ஆலயங்களையும் அழகுபெறச் செய்துமுடித்தான். இவ்வாறு அவ்வரசன் விஷ்ணுவினுடையவும், சிவனுடையவும் பல கோயில்களையுங் கட்டிமுடித்து பல கஷ்டங்காலும் பிணிகளாலும் பசுக்களுக்கும், ஸ்திரீகளுக்கும், பாலர்களுக்கும் ஏற்படும் துன்பங்களை விலக்கி இப்பட்டணத்தைக்காப்பாற்றிவரும் அத்தேவர்களுக்குப் பூஜைசெய்துவந்தான். வஸிஷ்டேசருக்கும், வைத்யனாதருக்கும், ஆலயங்கள் கட்டுவித்து நகரின் கிழக்கேயுள்ள மாரியை அர்ச்சித்துவந்தான்.

அக்காலத்தில் அவன் மனைவி கருத்தரித்தாள். காலவளவில் குமரனைப் பார்வதி ஈன்றார்போல் ஓர் தனயனைப்பெற்றெடுத்தாள். அக்குழந்தைக்குத் தந்தை ஜயசோழன் என்னும் நாமகரணஞ் செய்தார். தனம், தான்யங்கள் வஸ்திரங்கள் பசுக்கள் இவைகளை மறையோர்களுக்கு அளித்தான். (தொடரும்)

N. வைத்தியனாதசாஸ்திரி,
ஸரஸ்வதிமஹால், தஞ்சை.